








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 11.11.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்












INDIAN OCEAN RIM ASSOCIATION

# இந்திய நிகழ்வுகள்

- **மத்திய அரசும் ஆந்திர பிரதேச மாநிலமும் உலக வங்கியுடன் இணைந்து** ஆந்திர மாநிலத்தில் **ஏழை மற்றும் பலவீனமான விவசாயிகளுக்கு**, அவர்களது விவசாய உற்பத்தி, லாபம் மற்றும் பருவநிலை தாங்குதிறன் ஆகியவற்றை அதிகப்படுத்துவதற்காக 172.20 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான **கடன் ஒப்பந்தத்தில்** மையெழுத்திட்டு இருக்கின்றன.

- மத்திய **ஆயுஷ் துறை அமைச்சரும்** மத்திய **கலாச்சார துறை இணை அமைச்சரும்** இணைந்து இரண்டு நாள் நிகழ்வான **"ஆயுர்வேதத்தில் வணிக வளர்ச்சி மற்றும் தொழில் முனைவோர் மீதான தேசியக் கருத்தரங்கு"** என்ற மாநாடு **டெல்லியில் தொடங்கி** வைத்துள்ளனர்.
    - இம்மாநாடு ஆயுர்வேதத் துறையில் மொதில் முனைவோர்களையும் ஆயுர்வேதத் துறையின் அனைத்து பங்குதாரர்களையும் வியாபார வாய்ப்புகளை நோக்கி ஊக்கப்படுத்த உள்ளது.

- மத்திய உணவுப்பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சர் **"வெள்ள நடவடிக்கை"** (operation Flood) என்பதையொட்டி அமையும் வகையில் **பசுமை நடவடிக்கை** (operation Greens) செயல்படுத்துவதற்கான **யுக்திசார் நடவடிக்கையை அங்கீகரித்துள்ளது.**
    - **2018-2019** ஆம் ஆண்டிற்கான **பட்ஜெட் உரையில்** தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு (Top-Tomato, onion and potato) ஆகியவற்றின் உற்பத்தியை சீராக்க ரூபாய் **500 கோடிகள் மதிப்**பில் **"பசுமை நடவடிக்கை"** என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது.

# உலக நிகழ்வுகள்

- **மத்திய சுற்றுலாத்துறை** அமைச்சகம், **கொரியக் குடியரசின்** கலாச்சாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்காக ஒரு **புரிந்துணர்வு ஒப்பந்தம்** ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

- **இந்திய பெருங்கடல் ரிம் கூட்டமைப்பின் (IORA)** வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டம் (IORA Council of (foreign) ministers meeting) **தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில்** நடைபெற்றுள்ளது.
    - இந்தியாவின் பிரதிநிதியாக வெளிவிவகாரத்துறை இணை அமைச்சர் **வி.கே.சிங்** பங்கேற்றார்.
    - இந்தியப் பெருங்கடல் ரிம் கூட்டமைப்பின் (IORA), **21 நாடுகளை** உள்ளடக்கியது. இதன் **தலைமையகம் மொரிஷியஸ் நாட்டின் எபினோ நகரத்தில்** அமைந்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **பெண்களுக்கான 6-வது 20 ஓவர் உலகக் கோப்பை போட்டி** (ICC-woman's world T20 – 2018) நவம்பர் **9 முதல் 24** வரை **மேற்கிந்திய தீவு** நாடுகளில் நடைபெற உள்ளது.
- குறிப்பு:
    - 20ஓவர் உலக கோப்பையை ஆஸ்திரேலிய அணியானது மூன்று முறை கைப்பற்றியுள்ளது.
    - இங்கிலாந்து மற்றும் வெஸ்ட் இண்டீஸ் அணிகள் தலா ஒருமுறை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நியமனங்கள்

- **மேகாலயாவில் முதல் யோக் ஆயுக்தாவின் தலைவராக** கௌகாத்தி உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி **"பிரணாய்**

குமார் முசரி” என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- லோக் ஆயுக்தா என்பது அரசு அதிகாரிகளையும் சேர்த்து, முதல்வர், துணைமுதல்வர், அமைச்சர்கள், சட்டமன்றத்தின் சபாநாயகர் ஆகிய பொது அலுவலர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான வகையில் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் அமைப்பாகும்.

## முக்கிய தினங்கள்

- **அமைதி மற்றும் மேம்பாட்டுக்கான உலக அறிவியல் நாள்** (World Science Day For Peace and Development) - **நவம்பர் 10**
  - அன்றாட வாழ்வில் அறிவியலின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 10 ஆம் நாள், அமைதி மற்றும் மேம்பாட்டுக்கான உலக அறிவியல் நாளாக கடைபிடிக்கப்படுகிறது.
  - 2018 உலக அறிவியல் நாள் கருப்பொருள் (Theme) : **“அறிவியல் ஒரு மனித உரிமை”** என்பதாகும்.

We Shine Academy TM